நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், உளுந்தூர்பேட்டை.
முன்னிலை: திருமதி.வே.கோமதி, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1, உளுந்தூர்பேட்டை
2026-ம் ஆண்டு மே மாதம் 26 ம் நாள் செவ்வாய்கிழமை

**சி.எம்.பி. எண்.642/2026**

1. திருமதி. லூர்துமேரி (வயது 66/2026)
க/பெ. லூர்துசாமி

.. மனுதாரர் /எதிரி.

// எதிர் //

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
எலவனாசூர்கோட்டை காவல் நிலையம்.
குற்ற எண். 118/2026

U/sec. 4(1) (i) TNP Act, 4(1)(A) TNP Amendment Act 2024

..எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்.

இம்மனுவானது 18.05.2026 தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ரஞ்சித்., BA.,BL.,, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் உளுந்தூர்பேட்டை அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு பின்வருமாறு.

**உத்தரவு**

1. மனுதாரர் /எதிரி தரப்பில் எதிரியை பிணையில் விட கோரி பிரிவு 480 BNSS-ன்கீழ் முதலாவது பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எலவனாசூர்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 118/2026 ல் கண்டுள்ள எதிரி மீது 4(1) (i) TNP Act, 4(1)(A) TNP Amendment Act 2024 ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு 17.05.2026-ம் தேதி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

3. மனுதாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர், எதிரி கடந்த 17.05.2026ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர்/எதிரி அப்பாவி என்றும், தலைமறைவாகமாட்டார் என்றும், சாட்சிகளை கலைக்க மாட்டார் என்றும், வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு அளிப்பார் என்றும், இந்நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனையை ஏற்று நடப்பார் என்றும் பிணையதார்கள் வழங்க தயாராக இருக்கிறார். எனவே,

எதிரியை பிணையில் விட வேண்டும் என்று எடுத்து உரைக்கப்பட்டது.

4. அரசு தரப்பிற்கு, அறிவிப்பு கொடுக்கப்பட்டு, மனுதாரர்/எதிரிக்கு முந்தைய வழக்குகள் சில உள்ளன. மனுதாரர்/எதிரியை பிணையில் விட்டால் இது போன்ற குற்றச்செயலில் தொடர்ந்து ஈடுபடுவார். எனவே, எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

5. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. கடந்த 17.05.2026–ந் தேதி குளத்து தெரு, எறையூர் கிராமம், உளுந்தூர்பேட்டையை சேர்ந்த எதிரி லூர்துமேரி க/பெ லூர்துசாமி என்பவரிடமிருந்து ஒரு பையில் 180 மில்லிஅளவு கொண்ட Old Chef என்ற லேபில் ஒட்டிய 23 பிராந்தி பாட்டில்களும், ரூ.200/– பணமும் இருந்தது. மேற்படி பிராந்தி பாட்டில்களை எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி வாங்கி விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார். மனுதாரர்/எதிரிக்கு மீது எலவனாசூர்கோட்டை காவல்நிலைய குற்ற எண்கள். 150/2025, 103/2025, 216/2025 ஆகிய வழக்குகளும், உளுந்தூர்பேட்டை மதுவிலக்கு அமல்பிரிவு காவல்நிலைய குற்ற எண். 03/2026, 21/2026 ஆகிய வழக்குகள் உள்ளன. மனுதாரர்/எதிரியை பிணையில் விட்டால் இது போன்ற குற்றச்செயலில் தொடர்ந்து ஈடுபடுவார். எதிர்மனுதாரர் பதிலறிப்பில் உள்ள ஆட்சேபணையை ஏற்றும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிணை மனுவை அனுமதிப்பது இயற்கையின் நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து மனுதாரரின் பிணை மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு இன்று 26.05.2026 நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V GOMATHI
Digitally signed by V GOMATHI
Date: 2026.05.26 02:04:58 +0600

நீதித்துறை நடுவர் எண்.1,
உளுந்தூர்பேட்டை.